னிக்க வேண்டுமென்று ஒரு செயற்குறிப்பை குழுவிடத்திலே நாம் தருகிறோம். அவர்கள் அதுபற்றியும் பரிசீலிப்பார்கள். இப்பொழுது அதுபற்றிய செயற்குறிப்பு இல்லையென்று குறிப்பிட்டேன்.

குமரி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்கல்.

*403—(*வினா எண் 6533)* டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக ஆங்கில முறை மருத்துவ கல்லூரியோ அல்லது சித்த மருத்துவ கல்லூரியோ தொடங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன, என்ன காரணங்களால் அங்கே மருத்துவக் கல்லூரியோ, சித்த மருத்துவக் கல்லூரியோ அமைக்க வாய்ப்பில்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்ல முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ மற்றும் மருத்துவத் துறைக் கல்லூரிகள் இரண்டும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், திருநெல்வேலியிலே இருக்கிற காரணத்தால் அருகில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லையென்று சொன்னேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ப்ரஃபொஷனல் கோர்சஸ் கல்லூரிகளும் கிடையாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அங்கே சித்த மருத்துவ முறைகளில் புகழ்பெற்ற மேதைகள் இருக்கின்ற

1987 ஏப்ரல் 20]

காரணத்தாலும் அங்கே எங்கும் கிடைக்காத பல நல்ல மூலிகைகள் கிடைக்கிற காரணத்தாலும், அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, அங்கே ப்ரஃபொஷனல் கோர்சஸ் கல்லூரி எதுவும் இல்லையென்ற குறையைத் தீர்க்கின்ற விதத்தில், ஏதாவது ஒரு கல்லூரியைத் துவக்க மீண்டும் மறுபரிசீலனை செய்து, கொண்டு வர முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல மூலிகைகள் எல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். இருந்தால் அரசுக்குத் தகவல் தருமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், இப்பொழுது அங்கே துவக்குகின்ற சாத்தியக்கூறு இல்லையென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் வேறுசில மாவட்டங்களில் நாட்டு வைத்தியம் என்ற பெயரால் பல்வேறு வகையான நோய்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டு வருகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் டாக்டர் சதாசிவம் என்ற மருத்துவருக்குப் பக்கவாத நோய் ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்பட்டார். ஆனால், சுமார் 15 நாட்களுக்குள் தனது சொந்த வைத்தியத்தால் பூரண குணம் அடைந்து இன்றைக்கு நலமாக இருக்கிறார். அது ஆச்சரியமாக இருந்தாலும்கூட அங்கே அது நடந்தது. அந்த மருத்துவ முறைகள் சில குடும்பத்தினருக்கு மட்டும் தெரிந்து இருப்பதால், அவை இன்று அழிந்து வருகின்றன. ஆகவே, அந்த மருத்துவரோடு இந்த அரசாங்கம் ஒரு உடன்பாடு செய்து அவர்களுக்குத் தெரிந்த அறிவைப் பெற்று நாட்டு மக்கள் எல்லோரும் பயன்பெறுகிற வகையில், இந்த அழிந்து வருகிற மருத்துவ அறிவைப் பாதுகாத்துக் கொள்கிற அளவுக்கு ஒரு மையம் கன்னியாகுமரி மாவட்டம் அல்லது வேறு ஏதாவது ஒரு மாவட்டத்தில் அமைக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பக்கவாதம் வந்தால், இப்பொழுது அண்ணா நகரில் உள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவ மனையில் வைத்தியம் செய்கிறார்கள். ஏராளமான வியாதியஸ்தர்கள் சிகிச்சை பெற்று குணம் அடைந்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற தகவல்பற்றி மேற்கொண்டு விரிவாக எழுதுவாரானால், அந்த வைத்தியரிடத்திலே தகவலைப் பெற்று—அரசு அதற்கு உண்டான சன்மானம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறது—அவரிடம் உள்ள மூலிகை போன்ற ரகசியங்களை அரசுக்குத் தந்தால் பேருதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் வாங்கித் தருவார் என்று நம்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஏற்கனவே பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தது. நன்றி. அதை ஆரம்பித்து இடம் இல்லாமல் மிகவும் சிரமம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே, இந்த ஆண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து, நாட்டு மருத்துவ முறையாக இருக்கிற காரணத்தாலும், மக்கள் அதிகமாக விரும்பி வருகின்ற காரணத்தாலும் இந்த ஆண்டே அங்கே கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழனியில் இடம் கிடைக்காததுதான் பெரிய தொந்தரவாக இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இடம் தேடுவார்களானால் நல்லது. இடத்தை வருவாய்த் துறையும் தேடிக்கொண்டிருக்கிறது, இந்திய மருத்துவத் துறையும் தேடிக் கொண்டிருக்கிறது. இடம் கிடைத்தால் கட்டிடம் கட்டுவது பற்றி அரசு பிறகு பரிசீலிக்கும்.